# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

28.09.2026 துளிகள் – 39

## சபையின் 'நல்ல ஐக்கியத்திற்கு' திறந்த மனம் வேண்டும்!

மெய்யான ஐக்கியத்தை நாடுவோர், தங்கள் ஸ்தல சபைக்கு கண்காணியாயிருப்பவரிடம் தங்களை மறைத்துக் கொள்ளவே மாட்டார்கள். 'தங்கள் இருதய சிந்தைகளை மறைத்துக் கொள்ள' துணிந்தவர்கள் யாராயிருந்தாலும், அந்த ஸ்தல சபையை விட்டே தங்களை வெளியே வைத்துக் கொண்டவர்களாய் இருப்பார்கள்! அதுபோலவே, அந்த ஸ்தல சபையின் கண்காணியானவரும் தங்கள் சிந்தைகளை சக விசுவாசிகளிடம் பகிரங்கமாய் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ளவும் வேண்டும். இதுபோன்ற செயலால், ஜனங்கள் அந்த கண்காணியானவரை எளிதில் புரிந்துகொண்டு, அவரோடு ஐக்கியமாயிருப்பார்கள்! சபையில் பரிசுத்தவான்களாக வாழ்ந்திட வாஞ்சிப்பவர்கள், தங்களை நடத்துபவரிடம் முழுவதுமாய் மனம் திறந்து பேச விருப்பம் கொண்டிருக்க வேண்டும் (2கொரி.5:11). அப்போதுதான் அந்த சபையின் மூப்பராயிருப்பவர்கள், மகிழ்ச்சியுடன் அவர்களுடைய இரட்சிப்பிற்கு பிராயாசப்படும்படி தூண்டப்படுவார்கள்! (எபி.13:17).

– ரத்னம்